535—

வேலை வாய்ப்பு அற்றவர்களுக்கு உதவித் தொகையை உயர்த்துதல்

*25940—**திரு கே. கந்தசாமி:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) படித்து வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து பல ஆண்டுகள் காத்திருந்தும் வேலை வாய்ப்பு அற்றவர்களுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையை உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு ஏ.எம். பரமசிவன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்த உதவித் தொகையை உயர்த்துவதைப் பற்றிய கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்து வேலை வாய்ப்பு இல்லாத பட்டதாரிகள் மற்றும் வேலையில் பயிற்சி பெற்றவர்கள் பல ஆண்டுகளாக வேலை வாய்ப்புக்காக காத்து இருக்கின்ற வேளையில், வேலை வாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்தவர்களுக்குக் கொடுக்கின்ற உதவித் தொகை இன்றைக்கு இருக்கின்ற நிலவரப்படி போதாத காரணத்தால், அதை மீண்டும் மறுபரிசீலனை செய்து அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கின்ற வரை கொடுக்கின்ற உதவித் தொகையை அதிகரிப்பதற்கு மீண்டும் அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, படித்த இளைஞர்களுக்கு உதவித் தொகை 31–3–1993 வரை கொடுக்கப்பட்டு வந்தது. இப்போது அந்த திட்டம் இல்லை. ஆகவே, பார்வையற்றோர், வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிந்தவர்களுக்கு மாதந்தோறும் உதவித் தொகை, நிவாரணத் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1995 மே 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த படித்த வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்கு மட்டும் இதுவரை உதவித் தொகைக் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. அதே நேரத்திலே இப்போது எஸ்.எஸ்.எல்.சி. முடித்துவரும் அந்த வேலை வாய்ப்பற்றவர்களுக்கு, அந்த மாணவர்களுக்கு 15, 20 வருடங்கள்கூட வேலைவாய்ப்பு கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது. அதற்கு அரசிடம் ஏதாவது அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அனுமதி இருக்கிறதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 முதல் 1993 மார்ச் முடிய உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. அந்த திட்டம் இப்போதைக்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் வெ. சரோஜா.

டாக்டர் வெ. சரோஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்து வேலையில்லா பட்டதாரிகளுக்கு மற்றும் பிளஸ் 2 அல்லது 10-வது படித்துவிட்டு பதிவு செய்து வேலையில்லாமல் இருப்பவர்களுக்கு மற்ற நிறுவனங்களில் வேலை கிடைத்துவிட்டபோதிலும் பெரும்பாலான மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் காத்திருப்போர் பட்டியலிலிருந்து அவர்கள் பெயர்கள் நீக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா? வேலை கிடைத்தவுடன் அந்த வேலை கிடைத்த நபரின் பெயர், பதிவு எண், எந்த நிறுவனத்தில் வேலை அளிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தையும், அந்த அறிவிப்பையும் கட்டாயமாக எல்லா மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களும் அந்த அறிவிப்பை குறிப்பிட்ட காலத்திற்குள் அறிவிப்பு செய்து வேலை கிடைத்தவர்களுடைய பெயர்களை காத்திருப்போர் பட்டியலிலிருந்து நீக்கப்படுவதன் மூலம் வேலை இல்லாதவர்களின் அந்த எண்ணிக்கைக் குறைவதோடு நாம் அளிக்கும் உதவித் தொகையும் குறையும் என்பதை அரசு கருத்தில் கொண்டு இதை உடனடியாக அமல் செய்ய அரசு ஆவனசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ.எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் சொன்னபடி அந்த திட்டம் முறைப்படி அமல்படுத்தப்பட்டு வருகின்றது. தனியார்

நிறுவனம் வேலைக்கு எடுத்துக்கொள்கிற நேரத்தில் அந்த பெயர் காத்திருப்போர் பட்டியலிலிருந்து நீக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *536*, திரு. எஸ்.எஸ். ராமசுப்பு, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

536—

இரட்டைக்குளத்திலிருந்து கால்வாய் வெட்டுதல்

20733*—திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் ஒன்றியம், பரங்குன்றாபுரம், வாடியூர், அச்சங்குட்டம், குரிச்சான்பட்டி விவசாயிகளுக்காக இரட்டைக்குளத்திலிருந்து கால்வாய் வெட்டிக் கொடுக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. டி.எம் செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பெரிய இரட்டைக் குளம் சின்ன இரட்டைக் குளம் மற்றும் இலந்தைக்குளம் ஆகிய குளங்கள், இரட்டைக்குளம் அணைக்கட்டு மூலம் பாசன வசதி பெறுகின்றன. இரட்டைக் குளத்திலிருந்து வரும் நீர் மேற்கண்ட மூன்று குளங்களுக்கும் போதுமானதாக இல்லாத நிலையில் ஆலங்குளம் ஊராட்சி ஒன்றியக் குளங்களுக்கு இரட்டை குளம் அணைக்கட்டிலிருந்து புதிதாக கால்வாய் வெட்டி நீர் வழங்க சாத்தியமில்லை.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இரட்டைக் குளத்திலிருந்து சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். தென்மேற்குப் பருவ மழைக்காலத்தில் அங்கே அந்த கால்வாயிலிருந்து அந்த ஆற்றிலிருந்து வருகின்ற தண்ணீரானது மிக அதிகமாக வரும்போது இந்த குளங்கள் இந்த மானாவாரி குளங்கள் எங்களுடைய பகுதியிலே, பரங்குன்றாபுரம், வாடியூர், அச்சங்குட்டம், குரிச்சான்பட்டி பகுதிகளிலே 10 குளங்கள் இருக்கின்றன. இந்த குளங்களுக்கு எந்த பாசன வசதியும் இல்லாததனால் இந்த இரட்டைக் குளத்திலிருந்து ஒரு கால்வாய், சிறிது